‘தொன்று’வா? ‘தோன்று’வா?

(ஒரு பாடபேத ஆராய்ச்சி)

மு. சண்முகம் பிள்ளை
தமிழ் விரிவுரையாளர், திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி,
சென்னைப் பல்கலைக் கழகம்.

[தமிழ்த்துறை வெளியிடும் ‘தமிழாய்வு’
ஐந்தாம் தொகுதியிலிருந்து எடுத்து வெளியிடப்பட்டது]

சென்னைப் பல்கலைக் கழகம்
1977

2. 'தோன்று'வா? 'தோன்று'வா ?*

(ஒரு பாடபேத ஆராய்ச்சி)

மு. சண்முகம் பிள்ளை

தமிழ் விரிவுரையாளர், திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி,
சென்னைப் பல்கலைக் கழகம்.

தோற்றுவாய்

சென்னை மாநகரிலே 1963-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் 'தொல்காப்பிய மகாநாடு' ஒன்று நடைபெற்றது. அதில் பேசிய மகாவித்துவானுகிய தமிழன்பர் ஒருவர் தொல்காப்பிய நூற்பா ஒன்றின் மூலபாடம் பற்றிய ஒரு புதுக்கருத்தை வெளியிட்டனர்.

• 'மூன்றுஉறுப்பு அடக்கிய தன்மைத்து ஆயின்,
தோன்றுமொழிப் புலவர், "அது பிண்டம்" என்ப'.

(செய்யுளியல், 165)

என்னும் சூத்திரத்தின் இரண்டாம் அடியில் முதற் சொல், 'தொன்று' என இருக்க வேண்டும் என்பதே. 'தோன்று' என்பது பிழையாகும் என்பதும் அவருடைய கருத்து. இதுபற்றி அவர் தந்த விளக்கம் வருமாறு :

தொல்காப்பியர் தமக்கு முற்பட்ட நூலாசிரியரின் கருத்துகளை மேற்கொண்டு கூறுமிடத்து, 'என்ப,' 'மொழிப,' 'என்மனர்,' 'என்மனர் புலவர்,' 'குறியுணர்ந்தோர்' என்ருற்போன்ற தொடர்களை ஆண்டிருப்பது போலவே, இச்சூத்திரத்தும் முந்திய ஆசிரியரைச் சுட்டியுள்ளார் என்பதும், இக்கருத்திற்குப் பழமை என்னும், பொருள் தரும் தொன்று என்னும் வடிவமே சிறப்புடைத்தாம் என்பதும், இச் சூத்திர பாடம் 'தொன்று மொழிப்புலவர்' எனக் கோடலே தகும் என்பதும் தமது தீர்மானமான கொள்கை என்று கூறினர்.

---

* சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடத்தும் ஆசிரியர் மாணவர் கருத்தரங்கில் 27-1-1977ல் படிக்கப் பெற்ற கட்டுரை.

இக்கொள்கையை மறுத்து, ஏற்கெனவே பதிப்புகளில் பயின்று வரும் 'தோன்று' என்னும் பாடமே தகும் என மற்றொரு தமிழ்ப் புலவர் எதிர்ப்புக் குரல் எழுப்பினர். அவர் தந்த விளக்கம் பின் வருமாறு :

1. பழைய ஏடுகளில் ஒற்றைக் கொம்பிற்கும் இரட்டைக் கொம்பிற்கும் வேறுபாடு காண இயலாது. எனவே, 'தொன்று மொழி' என்பது 'தொன்று யொழி தோன்றுமொழி' என இருவகையாகவும் படிக்க இடமுண்டு.

2. 'தோல் எனமொழிப தொன்மொழிப் புலவர்'என்னும் செய்யு ளியல் 230ஆம் சூத்திரத்தில், 'தொன்மொழிப்புலவர்' என்னும் ஆட்சி யும் தொல்காப்பியத்துக் காண்கிறது. இவற்றைப் பார்க்கும்போது நண்பர் தமிழன்பர் அவர்களின் கூற்று ஏற்றுக்கோடற்குரியது என்றே நமக்குத் தோன்றும். ஆனல், உண்மை அதுவன்று. 'தோன்று மொழிப்புலவர் என்னும் பாடத்தையே முன்புள்ளோர் கொண்டனர் என்பது ஒரு சில குறிப்புகளால் தெளிவாகத் தெரியவருகிறது.

3. இதுவரை அச்சிட்ட தொல்காப்பியப் பதிப்புகளில் எல்லாம் 'தோன்றுமொழிப்புலவர்' என்னும் பாடமே உள்ளது.

4. இச்சூத்திரத்தில் இரண்டாம் அடிக்கு 'அது' என்பது இன்றி, 'தோன்றுமொழிப்புலவர் பிண்டம் என்ப' என்னும் பாட வேறுபாடு ஒன்றே பிரதிகளின் பரிசோதனையால் காணக் கிடைக்கிறது.

5. இந்நூலின் உரையாசிரியர்களுள் இளம்பூரணர் பேராசிரியர் உரைகளில் இச்சூத்திரப் பொருள் விரித்துரைக்கப்படவில்லை. அத ஞல் அவர்கள் கொண்ட மூலபாடம் புலப்பட வழியில்லை.

6. நச்சினர்க்கினியர் உரையில் இதற்குப் பொருள் தரப் பட்டிருக்கிறது. அவர் கொண்ட பாடம் '*தோன்றும் மொழி*' என் பதே என்பது அதனுல் தெளிவாகிறது. அவர்தம் உரை வருமாறு :

'சூத்திரமும் ஓத்தும் படலமும் என்கின்ற மூன்று உறுப்பினையும் உள்ளடக்கிய தன்மைத்தாய் வரின், *விளங்கிய மொழியையுடைய* புலவர் அதனைப் பிண்டம் என்று பெயர் கூறுவர்' என்பது.

'விளங்கிய' என இவர் உரைக்கும் பொருளுக்குத் 'தோன்றும்' என்னும் பாடமே பொருத்தமுடைத்து.

7. மேலும், சூத்திரம் என்பது அடிவரையறையில்லாத பாவகை ஆறனுள் ஒன்று என்று தொல்காப்பியர் கூறுகிருர். எனவே, நூற்பா விற்கும் ஓசை அமைதியும் எதுகை, மோனை, முதலிய செய்யுளமை தியும் உண்டு என்பது போதரும்.

அவற்றுள்,

சூத்திரம்தானே

ஆடிநிழலின் அறியத்தோன்றி,

நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க,

யாப்பினுள் தோன்ற யாத்து அமைப்பதுவே' (செய். 162) என்பது சூத்திரம் பற்றிய தொல்காப்பியர் விதி. இதில், 'யாப்பினுள் தோன்ற யாத்து அமைப்பதுவே' என்பது கூர்ந்து கவனிக்கத் தக்கது. 'யாப்பினுள் தோன்ற' என்பது சூத்திரமாகிய செய்யுளில் விளங்கு மாறு என்பது பொருளாம்.

ஆகவே, இச்சூத்திரத்திற்கும் 'மூன்றுறுப்பு அடக்கிய' என்னும் முன்னடிக்கு ஏற்ப, 'தோன்றுமொழிப் புலவர்' என நெடில்-மோனை அமைதி யாப்பின் ஓசைக்கு ஒத்ததாகும்.

எனவே,யாப்பமைதிக்கும் இன்னோசைக்கும் 'தோன்றும் மொழிப் புலவர்' என்பதுவே சிறப்புடைத்தாகும். நச்சினார்க்கினியர் எழுதிய பொருளினாலும் இப்பாடமே அவர் கால வழக்கிற் பயின்றது என்பது தெரியவரும், ஆதலால், இச்சூத்திரத்தில் தோன்று மொழிப் புலவர்' எனக் கொண்ட பாடம் தவறன்று என்பது போதரும்.

இவ்விளக்கங்கள் தமிழன்பருக்குத் திருப்தியளிக்கவில்லை. மீண்டும் தமது கொள்கையை வலியுறுத்திக் கூறும்பொருட்டு மறுப் புரைப் புலவரின் மொழிகளையே எடுத்துக்காட்டி மேலும் பேசலானார் :

" நமது நண்பர், 'தோன்று மொழிப் புலவர்' என்பதே சிறந்த பாடம் எனக் காட்ட விழைகின்றார். அதற்கு அவர் காட்டிய காரணங்களுள் ஒன்று, 'பழைய ஏடுகளில் ஒற்றைக் கொம்பிற்கும் இரட்டைக் கொம்பிற்கும் வேறுபாடு காண இயலாது என்பது. எனவே, 'தொன்றுமொழி' என்பது 'தொன்றுமொழி', 'தோன்று மொழி' என இருவகையாகவும் படிக்க இடமுண்டு என்பது தெளிவு. இதுவே எனது கருத்துமாம். 'தொன்றுமொழி' என்பதே ஏடெழுது வோரால் பிழைபடத் 'தோன்றுமொழி' என எழுதப்பட்டது என்பதே எனது கருத்து.

செய்யுளியல் 230-ஆம் சூத்திரத்தினுள் 'தொன்மொழிப் புலவர்' என்பதற்குரிய பொருளே 'தொன்றுமொழிப் புலவர்' என்பதற்கும் பொருளாகும்.

இதுவரை அச்சிட்ட தொல்காப்பியப் பதிப்புகளில் எல்லாம் 'தோன்றுமொழிப் புலவர்' என்னும் பாடமே உள்ளது என்று கூறு

சிறுர் நமது நண்பர். பண்டு தொட்டுக் காணப்படுவதால் பிழை திருத்தமாகுமா? நச்சினுர்க்கினியர் 'தொன்றுமொழி' என்பதற்கே 'விளங்கிய மொழி' என்று பொருள் கூறுகிருர். 'பிரசித்தமான' அல்லது 'பழைய' என்பதே விளங்கிய என்னும் சொல்லுக்குப் பொருளாகும்.

'நூற்பாவிற்கும் எதுகை மோனை முதலிய செய்யுளமைதியும் உண்டு என்பது போதரும்' என்று கூறுகிருர் நண்பர். இது அறிஞர் பலரும் ஒப்புக்கொள்ளுதற்குரிய கருத்தன்று.

இனி, 'தொன்று' என்னும் ஆட்சி பல நூல்களிலும் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

1. 'தொன்று மொழிந்து தொழில் கேட்ப'- மதுரைக். 72
2. 'தொன்றுரை - பழையவுரை'— மாறனலங்கார உரை மேற்கொள் : 702
3. 'தோலென மொழிபதொன்மொழிப் புலவர்'—தொல். செய். 238
4. 'தொன்றிய லவையம்'—பெருங். உஞ்சை. 36 : 40
5. 'தொன்றியன் மகளிர்'—பெருங். மகத. 6 ; 127
6. 'தொன்றுமனை'—பெருங். உஞ்சை. 47 : 222
7. 'தொன்று முதிர் தொடர்பு'—பெருங். மகத. 18 : 108
8. 'தொன்றுவழி வந்த குன்ருக் கற்பு'—பெருங். இலாவாண. 11 : 46
9. 'தொன்று படு சிதாஅர்'—புறம். 400 : 10.
10. 'தொன்றிசை' புறம். 217 ; 11
11. 'தொன்றில் வுலகத்துக் கேட்டுமறிதியோ'—கலித். நெய். 25 : 48.
12. 'தொன்று முதிர் வேளிர்' குறுந். 164.
13. 'தொன்றியல் புகழது'—பரிபா. 15 : 36.
14. 'தொன்ருேர் காலை நல்லமன்'—பதிற். 19 : 24.

இங்கு எடுத்துக்காட்டிய இம்மேற்கோள் அனைத்தும் 'தொன்று' என்னும் சொல், 'பழைமை' அல்லது 'பிரசித்தம்' என்னும் பொருளையே உணர்த்துதலை அறியலாம்.

இங்ஙனன்றித் 'தோன்றுமொழிப் புலவர்' என்னும் ஆட்சி எந் நூலிலேனும் காணப்படுமாயின், அவ்வாட்சியினை நமது நண்பர் எடுத்துக்காட்டின், நன்றி பாராட்டும் கடப்பாடுடையேன்.

இதுகாறும் வெளிவந்துள்ள பதிப்புகள் அனைத்திலும் காணப் படுவது காரணமாக ஒரு பிழையை நாம் தகுதி வாய்ந்த பாடமெனக் கொள்ள வேண்டுமாயின், ஆராய்ச்சி என்பதற்கே இடம் இரா தன்றோ? 'பூமி உருண்டை வடிவின தன்று' என்றவன் வாதத்தைப் பழைமை காரணமாக உலகம் ஏற்றுக் கொள்ளவில்லையே! நெடுங் கால ஆய்வுக்குப் பின்னன்றோ 'பூமி உருண்டை வடிவினதே' என் பதை உலகம் உணர்ந்தது' !

இங்ஙனமாகத் தமது கொள்கையையே மிகவும் வற்புறுத்தி மொழியலானுர் தமிழன்பர். அதன்பின் மாறுபட்ட கருத்துரைத்த தமிழ்ப்புலவர் எழுந்து, மதிப்புக்குரிய தமிழன்பர் அவர்கள் ஒன்றை விளக்க மற்றொன்று என்று பல கருத்துக்களைக் கூறியுள்ளார். இவை அனைத்தும் மறுக்கத்தக்கவை என்னும் நம்பிக்கை எனக்கு உண்டு. ஆயினும், ஒவ்வொரு கருத்தையும் தனித்தனி எடுத்து ஆராய்ந்துரைப் பதற்குப் போதிய காலம் இப்பொழுது இல்லை. மேலும், நண்பர் தமிழன்பர் கூறியவை மிகவும் கூர்ந்து கவனித்து ஆராயத்தக்கவை. எனவே, தொல்காப்பியர் கொண்ட பாடம் 'தொன்று' என்பதா ? 'தோன்று' என்பதா? என்பது குறித்து ஓர் ஆய்வுரையை யான் தனிப் படப் படிக்க விழைகிறேன் என்று தமது கருத்தை அவையினருக்கு எடுத்துரைத்தார். பின்னர் அந்த அவையும் கலைந்தது.

இவ்விரு தமிழறிஞர்களின் பேச்சுகளை அடிநிலையாக வைத்து இந்த ஆய்வுக் கட்டுரை தோன்றுகிறது.

தமிழன்பர், 'ஒரு பிழை தகுதிவாய்ந்த பாடமாகக் கொள்ளப் பெற்றது' என்னும் கருத்தினையே தமது நண்பர் தமிழ்ப்புலவருடைய விளக்கத்திற்குப் பின்னும் கொண்டுள்ளார் என்பது புலனாகிறது. தமிழன்பர் தாம் கூறும் 'தொன்று' என்னும் பாடத்தையே தமிழ்ப் புலவரின் உரைகள் அரண் செய்வது போலக் கூறியுள்ளார். இப் பாடத்தைத் துணிவதற்கு அவர்கள் தந்துள்ள விளக்கங்கள் மேலும் சில ஐயங்களைத் தோற்றுவிக்கின்றன. எனவே, எனக்குத் தோன்றும் சில கருத்துக்களைத் தமிழறிஞர் முன்னிலையில் வைத்து உண்மை காண வேண்டும் என்னும் அவாவுடன் இக்கட்டுரையை எழுதமுற்படு கிறேன்.

இது பாடபேதம் பற்றிய விவாதமேயாயினும், இதில் பல கருத்துகள் பல்வேறு ஆய்வுகளுக்கும் பயன்படக்கூடும் என்னும் நோக்கத்தால் விளக்கமாகவே இக்கட்டுரை அமைக்கப்பெற்றிருக்கிறது. இக்கட்டுரையின் தோற்றத்திற்கு முந்திய நிகழ்ச்சிகள் தெரிய வேண்டுவது மிகவும் இன்றியமையாததாய் இருத்தலின், முன்னிகழ்ச்சிகள் இங்குத் தோற்றுவாயாகக் கூறப்பட்டன.

'தோன்றுமொழிப் புலவர்' என்னும் பாடத்தைச் சிறந்த பாடம் என்று காட்டி விட வேண்டும் என்பது அன்று எனது நோக்கம். அது தவறன்று என்று காட்டவே விரும்புகிறேன். தமிழ்ப்புலவர் எடுத்துக் காட்டிய ஏதுக்கள் தமிழன்பரின் கருத்தை மெய்ப்பிக்கவில்லை என்றும் அது பிழைபட்ட பாடமே என்றும் தமிழன்பர் மறுத்துவிட்டார்கள். ஆகவே' 'தொன்று', 'தோன்று' என்னும் சொற்களின் இயல்பையும் பொருளையும் நான் அறிந்தவரையில் எடுத்துக்காட்டி, 'தோன்று' என்னும் பாடம் பிழைபட்டது அன்று என நான் கருதுவதற்கான காரணங்களை விவரிக்கத் தொடங்குகிறேன்.

தமிழன்பர் அவர்களின் உரைகளில் எனக்குப் போந்த ஐயங்களையும், அவை பற்றி நான் கண்ட விளக்கங்களையும் பின்வரும் வகையில் பாகுபடுத்திக் கொடுத்துள்ளேன்.
அவை வருமாறு :

1. 'தொன்று' என்பது 'விளங்கிய' என்னும் பொருள் தருவதா ?
2. 'விளங்கிய' என்பது பிரசித்தமான அல்லது பழைய என்னும் பொருள் தருவதாகுமா ?
3. தொன்று என்பது பயின்று வந்தனவாகத் தமிழன்பர் காட்டிய நூலாதாரங்கள் 'பழமை' அல்லது 'பிரசித்தம்' என்னும் பொருளை உணர்த்துகின்றனவா ?
4. 'தொன்று' என்பதன் ஆட்சியும் பொருளும் (தொல்காப்பியத்தில்)
5. 'தோன்று' அல்லது 'தோன்றும்' என்பதன் ஆட்சியும் பொருளும் (தொல்காப்பியத்தில்)
6. 'தொன்று' 'தோன்று' என்னும் இரு சொற்களும் ஒரே வகையானவையா ?
7. 'தோன்றுமொழிப்புலவர்' என்னும் தொடராட்சி.
8. நூற்பாவிற்கு எதுகை மோனை முதலிய செய்யுளமைதி உண்டா ?
9. கருத்துத் திரட்டு.
10. தேற்றம்.

1. 'தொன்று' என்பது 'விளங்கிய' என்னும் பொருள் தருவதா?

தொல், தொன்று, தொன்மை, தொண்டு என்பன பழமை என்னும் பொருள் தரும் ஒருவகைப்பட்ட சொற்களாம். 'தொன்று தொட்டு,' 'தொண்டுகிழம்' என இக்கால வழக்கிலும் வழங்குதல் காணலாம்.

'தொன்மை, தொடர்பு, தொத்து, தொண்டு
முறையே, முன்பு, **தொன்று**, பூருவம்,
தொல்லை, மூரி, விருத்தம், மூது,
முந்து, புராதனம், முதுமை என
வந்தவை **பழமை** ஆமெ௵ வைப்பர்'

என்பது திவாகரம் (பண்பு பற்றிய பெயர்).

'ஒல்லை, புராணம், முதுமை, முறை, ஊழ்,
தொல்லை, முந்து, **தொன்று**, பண்டு,
தொன்மை, முன்னை, புராதனம், **பழமை**'

என்பது பிங்கல நிகண்டு (2208).

'தொல்லை, முன், பண்டு, முந்தை,
தொன்று, பூருவம், புராணம்,
ஒல்லையே புராதனத் தோடு
உற்றஊழ் **பழமை** பத்தாம்'

என்பது சூடாமணி நிகண்டு (பண்பு. 10).

'விளங்குதல்' என்னும் பொருளில் 'விளக்கம்' என்னும் பெயர் வடிவம் பழமைப் பொருட்கு நிகண்டுகளில் தரப்படவில்லை. 'விளங்குதல்' என்பதனை 'ஒளி விடுதல்' என்னும் பொருளில் பிங்கல நிகண்டு தந்துள்ளது.

'**விளங்குதல்**, நகுதல், மின்னல், மிளிர்தல்,
துளங்குதல், நிகழ்தல், சுடர்தல், பிறழ்தல்,
இலங்கல், வயங்கல், இலகுதல், இமைத்தல்,
அலங்கல், தயங்கல், அலர்தல், நிலவல்,
ஒளிர்தல் என்றிவை **ஒளிவிடல்** ஆகும்'. (பிங்கல. 1939)

'அகல் இரு விசும்பி னுனும்
பகல் விளங்குதியால் பல்கதிர் விரித்தே' (புற. 8 : 10 11)

என்னுமிடத்தில் விளங்குதல் என்பது 'பிரகாசித்தல்' என்னும் பொருளையே தருகிறது. 'அகன்ற பெரிய ஆகாயத்தின்கண்ணும்

பகற்பொழுது விளங்குவை, பல கிரணங்களையும் பரப்பி' என்பது பழைய உரை.

'தொன்றுஇசை' (புறநா. 217 : 11)

என்பதற்குப் 'பழைய புகழை உடைய' என்பது புறநானூற்றுப் பழைய உரை. இந்நூற் பதிப்பின் அரும்பதம் முதலியவற்றின் அகராதியிலும் 'தொன்று — பழமை' என்றே டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தந்துள்ளார். நச்சினார்க்கினியர் பத்துப்பாட்டு, கலித்தொகை முதலியவற்றின் உரைகளில் இச்சொற்குப் 'பழமை' என்னும் பொருளினையே குறித்துள்ளார். இங்ஙனமாகப் பழைய உரைகளிலும் நிகண்டு முதலியவற்றிலும் 'தொன்று' என்பது பழமைப் பொருள் தருவதாகக் காணப்படுகின்றதேயன்றித் தமிழன்பர் கூறியவாறு விளங்குதல், விளக்கம் என்னும் பொருளில் இச்சொல் ஆளப்பெற்றதாகத் தெரியவில்லை.

2. 'விளங்கிய' என்பது பிரசித்தமான அல்லது பழைய என்னும் பொருள் தருவதாகுமா?

விளங்குதல் என்னும் சொல் 'பிரகாசித்தல்' என்னும் பொருளுடையது என்பது முன்பு காட்டப்பெற்றது. இது, 'தெளிவாதல்,' 'வெளிப்படையாகத் தெரிதல்' என்னும் பொருளிலும் வழங்குதல் உண்டு. 'பிரசித்தம்' என்னும் வடசொல்லும் 'வெளிப்படையான' 'விளக்கமான' என்னும் பொருள் தருவதே. 'விளக்கமின்மை' என்னும் பொருளில் 'அப்பிரசித்தம்' என்னும் சொல்லாட்சி மணிமேகலையில் உள்ளது (29 : 167-186). பிரசித்தம் என்பதற்குக் 'கீர்த்தி' என்னும் பொருள் இக்கால வழக்கே. தமிழ் லெக்ஸிகன் இப்பொருளுக்கு ஆதாரமாக உவின்ஸ்லோ அகராதியைக் காட்டியுள்ளது. 'வெளிப்படத் தெரிய வருவது' என்னும் பொருளில் 'விளங்கிய' என்பதற்குப் 'பிரசித்தம்' என்பதனைக் கருத்துப் பொருளாகக் கொள்ளலாம். ஆனால், 'பழைய' என்னும் பொருள் 'விளங்கிய' என்னும் சொல்லுக்குக் கூறுதல் பொருந்துமா? பழமையானவை எல்லாம் பிரசித்தமானவை என்றோ, கீர்த்தி பெற்றவை என்றோ கொள்ள இயலுமா? ஆகவே, 'விளங்கிய' என்பது 'பழைய' என்னும் பொருள் தருவதாகும் எனல் தெளிவின்றி உள்ளது.

3. 'தொன்று' என்பது பயின்று வந்தனவாகத் தமிழன்பர் காட்டிய நூலாதாரங்கள் 'பழமை' அல்லது 'பிரசித்தம்' என்னும் பொருளை உணர்த்துகின்றனவா?

நூலாதாரங்களாகத் தந்துள்ள பகுதிகளுக்கு முன்புள்ளோர் செய்த உரையையும் அவை பற்றி எழுதிய குறிப்புகளையும் நிரல்பட நோக்குவோம்.

1. 'தொன்று மொழிந்து தொழில் கேட்ப' —மதுரைக். 72.
'தம்முடன் பழமையைச் சொல்லி ஏவல் கேட்கும்படி'
(நச். உரை)

'தொன்று தொழுபிறை'—மதுரைக். 193
'நின் குலத்திற்குப் பழைதாகிய எல்லாரும் தொழும் பிறை'
(நச். உரை)

2. 'தொன்று உரை அணங்கே' மாறனலங். (உரை. மேற்.702)
'பழைய உரையை; தொன்று—பழமை (மாறனலங். உரை)

3. தோலென மொழிப தொன்மொழிப் புலவர்' (தொல். செய்யுள். 238) 'தொன்மொழி' என்றார் பழைய கதையைச் செய்தல் பற்றி. இது முன்வரும் சூத்திரத்தானும் பெறுதும். (தொன்மை தானே உரையொடு புணர்ந்த பழமை மேற்றே—தொல். செய்யுள். 237) (பேரா. உரை). இங்கே நச்சினார்க்கினியர் 'தொன்னெறிப் புலவர்' எனப் பாடங்கொண்டு, 'பழநெறியை அறிந்த புலவர்' என உரை கூறுகிறார்).

4. 'தொன்றிய லவையம்'—பெருங். உஞ்சை. 36 : 40. பெருங்கதை நூலுக்குப் பழைய உரை இல்லை. பதிப்பாசிரியர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் எழுதிய அரும்பதக் குறிப்புகள் உள்ளன. பழைய முறைமையினையுடைய சபை என்பது இத்தொடரின் பொருளாம்.

5. 'தொன்றியன் மகளிர்'—பெருங். மகத. 6 : 127.
பழைய முறைமையை அறிந்த மகளிர்' (உ.வே.சா. உரை)

6. 'தொன்று மனை'—பெருங். உஞ்சை. 47 : 222. (மறு இல் தொன்றுமனை) தொன்று—பழமை. (உ.வே.சா. குறிப்பு)

7. 'தொன்று முதிர் தொடர்பு—பெருங். மகத. 18 : 108
(பழமையாக முதிர்ந்து வருகிற நட்பு)

8. 'தொன்று—வழி வந்த குன்றுக் கற்பு'–பெருங். இலா. 11 : 46. (பண்டு தொட்டு வழிவழியாக வந்த குறைவு இல்லாத நிறைந்த கற்பு என்பது பொருளாம்)

9. 'தொன்றுபடு சிதாஅர்' — புறம். 400 : 10. (பழைய உரை இல்லாத பகுதி. நைந்து அழுக்கேறி மிகவும் பழகிப் போன ஆடை என்னும் பொருளதாகும்).

10. 'தொன்றிசை'—(புறநா. 217 : 11) 'பழைய புகழையுடைய' (பழையவுரை)

11. 'தொன்றிவ் வுலகத்துக் கேட்டு மறிதியோ? '—கலி. நெய். 25 : 48. 'பழைதாக இவ்வுலகத்து மகளிரும் தத்தம் கணவரைக்

கண்டால் கூடுவதன்றித் துணிந்திருந்தார் என்று கேட்டும் அறிதியோ?' (நச். உரை).

12. *'தொன்று முதிர் வேளிர்'*—குறுந். 164, (நற். 280 : 8) 'மிகப் பழைய வேளிர்' (வி. ரை.) மிகப் பழங்காலம் முதல் இந்நாட்டில் இருந்து பழமையுற்ற வேளிர் (உ. வே. சா. உரை).

13. *'தொன்றியல் புகழது'*—பரி. பா. 15 : 36. 'பழைதாய் இயல்கின்ற புகழையுடைய' (பழையவுரை).

14. *'தொன்ளுேர் காலை நல்லமன்'*—பதிற். 19 : 24. (முற்பட்ட காலத்து, முன் ஒரு காலத்து).

இங்கு எடுத்துக்காட்டிய மேற்கோள்களனைத்திலும் 'தொன்று' என்னும் சொல் 'பழைமை' அல்லது 'பிரசித்தம்' என்னும் பொருளையே உணர்த்துதலை அறியலாம்' என்று தமிழன்பர் குறிப்பிட்டுள்ளர்கள். எடுத்துக்காட்டிய மேற்கோள்கள் அனைத்திலும் 'தொன்று' என்னும் சொல் 'பழைமை' என்னும் பொருளில் வந்துள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை. பழைய உரைகாரர்களும், உ. வே, சாமிநாதையர் அவர்கள் எழுதிய குறிப்புகளும் இப் பொருளையே தருதல் மேலே காணலாகும்.

இனி, இச்சொல் பயின்றனவாகக் காட்டிய மேற்கோட் பகுதிகளில் எல்லாம் 'பிரசித்தம்' என்னும் பொருள் தருவதாயுள்ளதா? பிரசித்தம் என்ருல் வெளிப்படையானது அல்லது விளக்கமானது என்னும் பொருள் தருவதாகும் என்பது முன்னர் விளக்கப்பெற்றது. மேலும், பிரசித்தம் என்பதைக் கீர்த்தி பெற்ற அல்லது சிறந்த என்னும் பொருளில் தமிழன்பர் கருதுகிருரா? இப்பொருள் 'தொன்றியலவையம்,' 'தொன்று மூதிர் வேளிர்' என்னும் இடங்களில் தொனிப்பதுபோல் தோன்றினும் அது நேர் பொருளாக மாட்டாது; கருத்துப் பொருளே யாகும். இப்பொருளில் முன்னையோர் கருதிற்றிலர் என்பதும் 'தொன்று' என்பதற்குப் 'பழமை' என்னும் பொருளே கொண்டனர் என்பதும் முன்னர்க் காட்டியுள்ள மேற்கோள்களின் உரைப்பகுதிகளால் தெரியலாம்.

4. 'தொன்று' என்பதன் ஆட்சியும் பொருளும் (தொல்காப்பியத்தில்)

' இன்றி என்னும் வினை எஞ்சுஇறுதி
நின்ற இகரம் உகரம் ஆதல்
தொன்று இயல் மருங்கின் செய்யுளுள் உரித்தே'

(தொல். எழுத். 7 : 35)

என ஒரே ஓரிடத்தில்தான் 'தொன்று' என்னும் சொல் தொல்காப்பியத்துள் இடம் பெற்றுள்ளது. இங்கே மோனை, எதுகை அமைப்பு முறையில் 'தொன்று' என்பது 'இன்றி,' 'நின்ற' என்பவற்றிற்கு எதுகையாக வந்துள்ளது. எனவே, இச்சொல் வடிவில் 'தொன்று வா?' 'தோன்று வா?' என்னும் ஐயத்திற்குச் சிறிதும் இடம் இல்லை. 'தொன்று இயல் மருங்கில் செய்யுளுள் உரித்து' என்பதற்குப், 'பழக நடந்த கூற்றையுடைய செய்யுட்களிடத்து உரித்து' என இளம்பூரணரும், 'பழக நடந்த கூற்றையுடைய செய்யுளுள் உரித்து' என நச்சினார்க்கினியரும் உரை செய்துள்ளார்.

இதனால் இருவரும் இச்சொற்குப் 'பழமை' என்னும் பொருளே கொண்டனர் என்பது புலனாகும்.

5. 'தோன்று' அல்லது 'தோன்றும்' என்பதன் ஆட்சியும் பொருளும்

'தோன்ற', 'தோன்று' 'தோன்றும்' என்னும் சொல் வடிவங்கள் தொல்காப்பியத்தில் பல இடங்களில் இடம் பெற்றுள்ளன. 'தோன்றும்' என்பதற்கு நிற்கும், பிறக்கும், வரும், விளங்கும், அறியப் படும், புலப்படும், கிளக்கப்படும், நிகழும், வெளிப்படும் என்னும் பொருள்கள் உரைகாரர்களால் தரப்பட்டுள்ளன.

தோன்ற : 'யாப்பினுள் தோன்ற'யாத்து அமைப்பதுவே (தொல். செய்யு. 162) இங்கே 'தோன்ற' என்பதற்கு விளங்க அல்லது புலப் பட என்பது பொருளாம்.

தோன்றும் : 'வினையின் **தோன்றும்** பால்அறிகிளவியும்,
பெயரின் **தோன்றும்** பால்அறிகிளவியும்,
மயங்கல் கூடா தம் மரபினவே' (தொல். 10 : 11)

இச்சூத்திரத்தில் நச்சினார்க்கினியர், 'வினையின் தோன்றும்,' 'பெயரின் தோன்றும்' என்பவற்றிற்கு, 'வினைச்சொல்லான் *விளங்கும்*, பெயர்ச்சொல்லான் **விளங்கும்**' எனப் பொருள் கூறியுள்ளார்.

இங்ஙனமே 'விளங்கும்' எனத் தொல்காப்பியத்தில் வரும் சொல் லுக்குத் 'தோன்ற' என்று நச்சினார்க்கினியர் பொருள் எழுதிய இடமும் ஒன்று உளது.

'நோயும் துன்பமும் இருவகை நிலையின்,
காமம் கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய
....
ஒன்று இடத்து இருவர்க்கும் உரியபாற் கிளவி'
(தொல். பொருளியல் 2)

இதற்கு நச்சினார்க்கினியர் தரும் உரை விளக்கமாவது, துன்பமும் இன்பமுமாகிய இரண்டு நிலைக்களத்தும் காமம் கருதின வரலாற்று முறையிடம் விளங்க நகை முதலிய எட்டனுடைய கூறு பாடும் தோன்ற'—என்பது. இங்கே விளங்க என்பதற்குத் தோன்ற என்பது பொருளாகக் குறித்தல் புலனாகும். இதனால் 'தோன்று மொழிப் புலவர்' (தொல். பொருள். செய்யு. 165) என்ற இடத்தும். விளங்கிய மொழியையுடைய புலவர்' என்னும் நச்சினார்க்கினியர் உரை 'தோன்று' என்னும் சொல்லுக்கே உரியதாகும் என்பது உறுதி யாகும்.

6. 'தொன்று,' 'தோன்று' என்னும் இரு சொற்களும் ஒரே வகையானவையா?

'தொன்று' என்பது 'பழமை' என்னும் பொருள் தரும் பண்புப் பெயர். ஆகவே நிகண்டுகள் இதனைப் பண்பு பற்றிய பெயர்த் தொகுதியில் தருகின்றன. இது குன்று, மன்று, கன்று, இன்று என வரும் சொற்களைப் போன்ற வடிவ அமைதி பெற்றுள்ளது. 'தொன்று மொழிந்து, 'தொன்றுபடு,' 'தொன்றுமுதிர்' என இலக்கியங்களில் வரும் இடங்களை நோக்கினும் இது பெயராய் நிற்றல் விளங்கும்.

'தோன்று' என்பது குற்றுகர ஈற்றைக் கொண்ட வினை அடி, நிற்கும், பிறக்கும், வரும், புலப்படும், விளங்கும் முதலிய பொருள் களில் வருவதாகும். 'விளங்கிய மொழியையுடைய' என்னும் நச்சினார்க்கினியர் உரைக்குப் பொருத்தமாக அமைவது 'தோன்று' என்னும் வினையடியே. 'தோன்றுமொழி' என்பது 'விளங்கிய மொழி' எனப் பெயரெச்சமாய் இங்கு வந்துள்ளது எனக் கோடலே அமை வுடைத்தாம்.

தமிழன்பர் உரைத்தபடி 'தொன்று' என்னும் பெயர் வடிவிற்கு விளங்கிய எனப்பொருள் கூறல் பொருந்துவதோ? நச்சினார்க் கினியர் அக்கருத்தினராயின், 'விளக்கமான' என உரை எழுதியிருப் பர் அன்றோ?

7. 'தோன்று மொழிப் புலவர்' என்னும் தொடர் ஆட்சி

'தோன்றும்' என்பது முற்றாகவும் எச்சமாகவும் பயின்றுவரும் சொல்லாகும்.

' வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும் '

(தொல். சொல். வினை. 48)

' இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்
சிறப்பத் தோன்றும் மயங்கு மொழிக்கிளவி '

(தொல். சொல். வினை. 50)

‘ மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே ’
(தொல். எழுத். நூன். 18)

‘ எழுவாய் வேற்றுமை பெயர் தோன்றுநிலையே ’
(தொல். சொல். வேற். 4)

‘ விளியெனப் படுவ கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்றும் இயற்கைய என்ப ’ (தொல். விளி. 1)

எனவரும் சூத்திரங்களில் பயின்று வரும் சொற்களை நோக்கின், இது புலனாகும். இலக்கியங்களிலும் இவ்வகைப் பொருளில் இச்சொல் ஆளப்பெற்றிருத்தலைப் பின்வரும் செய்யுட் பகுதிகளில் காண லாகும்.

‘ உதுக்காண் தோன்றும் எம்சிறுநல் ஊரே ’ (நற். 264 : 9)

‘ மணி போலத் தோன்றும், மணிபோலத் தோன்றும்
மண்ணா மணிபோலத் தோன்றும்—என்மேனியைத்
துன்னான் துறந்தான் மலை .’ (கலித். 41 : 33–35)

‘ இன்று ஏழ் நாளில் இந்நகர் மருங்கே
வந்து தோன்றும் மடக்கொடி நல்லாள் ’ (மணி 7 : 24–25)

என வருமிடங்களில் தோன்றும் என்பது முற்றுப்பொருள் பயந்து நிற்கின்றது.

‘ திருவுடைத் திருமனை ஐது தோன்று கமழ்புகை
வருமழை மங்குலின் மறுகுடன் மறைக்கும் ’
(புறநா. 323 : 16-17)

பெருங்களிற்று அடியின் தோன்றும் ஒருகண்
இரும்பறை இரவல!’ (புறநா. 263 : 1-2)

‘ ஞான்று தோன்று அவிர்சுடர் ’ (அகம். 39 : 13)

‘ நீண்டு தோன்று உயர்குடை நிழல் என ’ (கலித். 100 : 3)

எனவரும் இடங்களில் பெயரெச்சப் பொருளில் தோன்று, தோன்றும் என்பவை வந்துள்ளன. இங்கெல்லாம் புலப்படுதல், விளங்குதல் என்னும் பொருளதாய் இச்சொல் ஆளப் பெற்றிருத்தல் நோக்கத் தகும். இச்சொல் சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுவ தோடு தேவாரம், திவ்வியப்பிரபந்தம் முதலிய பக்திப் பாடல்களில் மிகுதியாய்ப் பயின்று வந்துள்ளன.

‘ வடியேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்
வளர்சடை மேல் இளமதியம் தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ் கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில் வெண்குழைதோடு கலந்து தோன்றும்

இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில் திகழும் திருமுடியும்இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனுர்க்கே !'

எனத் தொடங்கும் திருப்பூவணத் திருத்தாண்டகச் செய்யுட்களில் எல்லாம் தோன்றும் என்னும் சொல்லாட்சி மிக்கு ஆளப்பெற்றிருத் தல் காணலாம்.

' தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்நாணும் தோன்றுமால்—சூழும்
திரண்டு அருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டு உருவும் ஒன்ருய் இசைந்து '

என்பது பேயாழ்வாரின் மூன்ரும் திருவந்தாதிப் பாடல் (63).

இங்குக் காட்டிய தேவார திவ்யப் பிரபந்தப் பாசுரங்களில் 'தோன்றும்' என்பது புலப்படும் அதாவது காட்சிக்கு இலக்காகும் என்னும் பொருளில் வினைமுற்ருக வருகிறது. தேவாரப் பாட்டில் 'இலங்கித் தோன்றும்' 'பொலிந்து தோன்றும்' என வருகின்ற தொடர், 'ஒளிவீசி விளங்கிக் காணப்பெறும், என்னும் பொருள் தரும். இங்ஙனமே தொல்காப்பியத்தில் நச்சினர்க்கினியரும், 'தெளியத் தோன்றும்' (தொல். சொல். விளி. 1) என்னும் தொடருக்கு விளங்கத் தோன்றும் என்று உரை கூறுகின்ருர். சேனுவரையர் 'சிறப்பத் தோன்றும்' (சொல். வினை 48, 50) என்னும் தொடருக்கும், விளங்கத் தோன்றும் என்றே உரை தருகின்ருர். தோன்றும் என் பதற்கு அடைமொழியாக அதே கருத்தில் வேறு சொல் அடுத்து வரும்போது தோன்றுதல் என்பது 'புலப்படும்' என்னும் பொருள தாகவே நிற்றல் காணலாம். அடைமொழி இன்றி வருமிடங்களில் தோன்றும் என்பது புலப்படும், விளங்கும் என்னும் பொருள்களைப் பயந்து நிற்கும் ஆற்றல் பெற்றதாயுள்ளது.

'ஒளிர் பொறி மஞ்ஞை அன்ன
தளிர் போன்ற சாயலவள் தோன்றுவாய்மை பெருகி'
(தேவாரம் 4 : 8 : 4)

'துள்ளி வெள்ளிள வாளைபாய் வயல்
தோன்று தாமரைப் பூக்கள் மேல்' (தேவா. 7 : 35 : 5)

'துயரிலங்கும் பல ஊழிகள்
தோன்றும் பொழுதெல்லாம்' (தேவா. 1 : 1 : 8)

எனவரும் தேவாரப் பாடலடிகளில் 'தோன்று', 'தோன்றும்' என்பன பெயரெச்சமாக ஆட்சி பெற்றிருத்தல் கவனித்தற்குரியதாம். இங்

ஙனமே திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களிலும் இச்சொற்கள் வருதல் பின்வரும் பகுதிகளால் விளங்கும் :

'மூன்றுடன் வணங்கு தோன்றுபுகழ் ஆணை
மெய்பெற நடாய தெய்வம் மூவரில்' (திருவாசிரியம் 3 : 2-3)

'தோன்று சோதி மூன்றுமாய்த்
துளக்கமில் விளக்கமாய்' (திருச்சந்த 4 : 3)

'சோதி போல் தோன்றும் சுடர்பொன் நெடுமுடிஎம்
ஆதி காண்பார்க்கும் அரிது' (முதல் திருவந். 49)

'சூட்டுயர் மாடங்கள் சூழ்ந்து தோன்றும்
துவராபதிக்கு என்னை உய்த்திடுமின்.' (நாச்சியார் 12 : 9)

தோன்று அல்லது தோன்றும் எனவரும் சொல்லாட்சி இலக்கிய இலக்கணங்களில் வருதல் கண்டோம், 'தோன்றும்' என்பது 'நிலை' என்பதனை அடுத்துப் பெயரெச்சமாக வருதலையும் 'தோன்றும் நிலை' எனவரும் தொல்காப்பியர் வாக்கில் காண்கிறோம். இவ்வாறே இச் சொல் 'மொழி' என்பதனை அடுத்துப் பெயரெச்சமாய் நிற்கின்றமை யைத் 'தோன்றுமொழி' என்னும் தொடரில் காணலாகும். "தோன்று மொழிப்புல்வர்" என்னும் தொடர்மொழி ஆட்சி பிற நூல்களில் உளவா ?' எனத் தமிழன்பர் அவர்கள் கேட்டுள்ளபடி அத்தொடர் மொழி அப்படியே வந்த இடம் இப்பொழுது கண்டு கொள்ளக்கூட வில்லை.

இலக்கண விளக்கப் பாட்டியலில் 'பிண்டம்' என்பதற்கு விளக் கம் தரும் சூத்திரம் தொல்காப்பியர் தந்துள்ள,

'மூன்றுப் படக்கிய தன்மைத் தாயின்
தோன்று மொழிப் புலவர் அது பிண்டம் என்ப'

(பாட்டியல் 136)

என்னும் சூத்திரமே. இந்நூலில் 'தோன்று' என்னும் பாடமே திரு. தாமோதரம்பிள்ளை அவர்கள் பதிப்பில் உள்ளது. இதற்கு, 'சூத்திரமும் ஓத்தும் படலமும் என்னும் மூன்றுறுப்பினையும் அகப்படுத்தி நிற்கும் தன்மையுடைத்தாயின் அதனை உலகினின்று விளங்கும் மொழியைக் கூறும் புலவர் பிண்டம் என்று கூறுவர்' என்று உரைவரையப் பெற் றிருக்கிறது. 'தோன்றும்' என்னும் சொல்லுக்கு இலக்கண விளக்க நூலுரையிற் காணும் பொருளும் நச்சினார்க்கினியர் கூறிய பொருளும் ஒன்றே. ஆகவே, நச்சினார்க்கினியர் கருதியது போலவே இலக்கண விளக்கமுடையாரும் 'தோன்றும்' என்னும் பாடமே கொண்டனர் என்பது விளங்கும்.

8. நூற்பாவிற்கு எதுகை, மோனை முதலிய செய்யுளமைதி உண்டா ?

தமிழன்பர் தமது உரையில், ''நூற்பாவிற்கும் எதுகை மோனை முதலிய செய்யுளமைதியும் உண்டு என்பது போதரும் என்று கூறுகிறார் நண்பர். இது அறிஞர் பலரும் ஒத்துக் கொள்வதற்குரிய கருத்தன்று'', என்று மறுத்தலித்துள்ளார். பொதுப்படையாக, 'இது அறிஞர் பலரும் ஒப்புக்கொள்வதற்குரிய கருத்தன்று' என்று பேசியுள்ளாரே யன்றி, ஒப்புக் கொள்ளாமைக்குரிய காரணங்களையோ அங்ஙனம் கருதும் அறிஞர்களையோ சுட்டி எதுவும் சொன்னாரில்லை. எனவே, இதுபற்றி நான் கண்ட கருத்துக்களை இங்கு விவரிக்க முற்படுகிறேன்.

முதலாவதாக, நூற்பாக்களை ஆசிரியர் தொல்காப்பியர் அடிவரை இல்லாத செய்யுட்களில் ஒன்று எனக் கொண்டுள்ளமை கருதத் தக்கது.

'எழு நிலத்து எழுந்த செய்யுள் தெரியின்
அடிவரை இல்லன ஆறுஎன மொழிப'—

'அவைதாம்,
நூலினான, உரையினான,
நொடியொடு புணர்ந்த பிசியினான
ஏது நுதலிய முதுமொழியான,
மறைமொழி கிளந்த மந்திரத்தான,
கூற்றுஇடை வைத்த குறிப்பினான.'

(தொல். செய்யு. 157, 158)

இங்கே, 'மொழிப' என முந்தையோர் கருத்தாக ஆசிரியர் தொல்காப்பியர் கூறுதலால், அவருக்கு முற்பட்ட காலத்து ஆசிரியர்களும் நூற்பா எனப்படும் சூத்திரத்தை அடி வரையறை இல்லாத செய்யுள் என்றே கொண்டனர் என்பது போதரும்.

'அவற்றுள்,
சூத்திரம் தானே
ஆடி நிழலின் அறியத் தோன்றி,
நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுள் தோன்ற யாத்து அமைப்பதுவே'

(தொல். பொருள். செய்யு. 162)

என்பது சூத்திரத்தின் இயல்பைக் புலப்படுத்தும் செய்யுளியல் சூத்திரம். மரபியலில் இக்கருத்தை இன்னும் விரிவாகவும் தெளிவாகவும் ஆசிரியர் உரைத்துள்ளார். அது வருமாறு :

"மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு
சில்வகை யெழுத்தின் செய்யுட் டாகிச்
சொல்லுங் காலை யுரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த வொண்மைத்தாகித்
துளக்க லாகாத் துணைமை யெய்தி
அளக்க லாகா வரும்பொருட் டாகிப்
பல்வகை யானும் பயன்றெரி புடையது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்.'

(தொல். பொருள். மரபி. 100)

இதற்கு இளம்பூரணர், பேராசிரியர் என்னும் இருவர் உரைகளே பழைய உரைகளாக இப்பொழுது காண்பவை. இவற்றுள் இளம் பூரணர் சூத்திரப் பொருளை விளக்கமாக எழுதாமல் கருத்தினையே புலப்படுத்தியுள்ளார். பேராசிரியர் உரை விரிவாக உள்ளது. அவர், 'சில்வகை எழுத்தின் செய்யுட்டாகி' எனவரும் இரண்டாம் அடிக்கு எழுதியுள்ள உரைப்பகுதி கூர்ந்து கவனிக்கத்தக்கது. அது வருமாறு :

"ஆடி நிழலின் அறியச் செய்யுங்கால், அதுபோல ஒரு வழிப் பொருளடக்க ஒரு வழி வெள்ளிடைக் கிடப்பச் செய்யப்படாது பொருட்கு வேண்டும் சில சொல்லாற் செய்யும் செய்கைத்து ஆகி. செய்யுள் என்ருன் அடிவரைச் செய்யுளின் வேறுபட்ட பொருட் பாட்டிற்ருகிய அடிவரைப் பாட்டினுட் சிறப்புடைய ஆசிரியத்தானும் வெண்பாவானும் செய்யப்படும் சூத்திரம் என்றற்கு என்பது. என்னை ? மண்டிலப்பாட்டின் உடம்பொடு புணர்த்துச் சூத்திரம் செய்தமையானும்,

'சின்மென் மொழியிற் ருய பனுவல்'
வெண்பாட்டாகி வருமாதலானும் என்பது.

இதனல் சூத்திரம் அகவற்பாட்டைப் போன்று வரும் அமைப் புடையது என்பது விளங்கும்.

'சின்மென் மொழியிற் ருய பனுவல்'

எனப் பேராசிரியர் காட்டிய சூத்திர அடி வெண்பாவிற்குரிய தளையமைதியுடன் காணப்பெறுதலும் நோக்கத்தக்கது. தளையமைதியையே பேராசிரியர் சுட்டிக் காட்டும் போது, செய்யுளோசைக்கு இன்றியமையாத எதுகை மோனை அமைதி நூற்பாவிற்குண்டு என்பது சொல்லாமலே பெறப்படும் அன்ருே?

நிகண்டு ஆசிரியுர்கள் சூத்திரத்திற்கு 'நூற்பா வகவல்' என்று பெயரிட்டு, அகவற்பா வகையை ஒத்தது சூத்திரம் என்பதைப் புலப் படுத்தியுள்ளனர்.

' நூற்பா வகவல் நுணங்க நாடில்
சூத்திரம் குறித்த யாப்பிற் ருகி
அடிவரை யின்றி விழுமிதின் நடக்கும்'

என்பது திவாகரம் (ஒலி பற்றிய பெயர்).

' அடிவரை யின்றி விழுமிதின் நடக்கும்
நூற்பா வகவல் சூத்திரம் என்ப '

என்பது பிங்கல நிகண்டு (2069). நிகண்டுகளில் காணும் சூத்திர விளக்கம் தொல்காப்பிய நூலையும் உரையையும் பின்பற்றி அமைந்தது என்பது தெளிவாம்.

'குட்டித் தொல்காப்பியம்' எனப் போற்றப்பெறும் இலக்கண விளக்கத்தில், செய்யுளியலின் இறுதியிலே, ஓரடியானும் பலவடியானும் வரும் செய்யுட்களும் உள என்று கூறி, அவ்வாறு வருவன பாட்டுரை, நூல், மந்திரம், பிசி, முதுசொல், அங்கதம், வாழ்த்து என்பனவாகும் என்றும் விவரித்துள்ளார்.

' ஓரடியானும் பலவடி யானும்
ஒரோவழி இயலும் உரைத்த அச்செய்யுள்
அவை தாம் பாட்டுரை, நூலே, மந்திரம், பிசியே,
முதுசொல், அங்கதம், வாழ்த்தொடு பிறவும்
ஆகும் என்ப அறிந்திசி னோரே. (இலக். செய்யு. 51)

'இஃது அடியின்றியும் ஓரடியானும் நடைபெறும் செய்யுட்களும் உள என்பதூஉம் அவை இவை என்பதூஉம் கூறுகின்றது' என்று உரையில் கருத்தும் தரப் பெற்றிருக்கிறது. 'இங்கே நூல்' என்றது நூற்பாவை.

' அத்தின் அகரம் அகரமுனை இல்லை' (தொல். எழுத். புணர். 23)

' மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்று '
(தொல். சொல். உரி. 96)

' எழுத்துப் பிரிந்து இசைத்தல் இவண் இயல்பு இன்றே '
(தொல். சொல். உரி. 97)

என்றாற்போல மோனை, எதுகை அமைப்புடன் உள்ள ஓரடிச் சூத்திரங்களையும் செய்யுள் எனவே கொள்ள வேண்டும் என்பது இலக்கண விளக்க நூலார் கருத்தாதல் ஒருதலை. அடி வரையறை இல்லாது வரும் செய்யுட்கள் எனத் தொல்காப்பியர் உரைத்த கருத்தையே இவர் விளக்கி உரைத்திருக்கின்றார்.

திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் வெளியிட்டுள்ள 'நுண்பொருள் விளக்கம்' என்னும் இலக்கணக் கட்டுரைத்

தொகுப்பின்கண், 'தெவு'வா, 'தேவு'வா, என்னும் கட்டுரையில் 'தெவுக் கொளற் பொருட்டே (தொல். உரி. 47), 'தெவ்வுப்பகை ஆகும்' (தொல் சொல். உரி. 48) எனும் சூத்திர பாடம் பற்றிய ஆராய்ச்சி ஒன்று நிகழ்த்திய இடத்தில், தொல்காப்பியர் தமது சூத்திரங்களை எதுகை மோனை இயல்பு பொருந்த அமைந்துள்ளார் என்பதனை உறுதிப் படுத்தியே 'தேவு' என்னும் பாடம் நேரிது என்னும் துணிவிற்கு வந்துள்ளார். அதுபற்றி அவர் கூறிய ருத்துகள் வருமாறு :

'ஆசிரியர் தொல்காப்பியனுர் பெரும்பாலும் எதுகை மோனைகள் அமைத்தே சூத்திரம் செய்துள்ளார். எதுகைக்கண் இரண்டாமெழுத் தொன்றெதுகையேயன்றி இனவெதுகை முதலியனவும் அமைந்திருக்கும். இதனைப் பல இடத்தும் காணலாகும்.

'நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய
கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்.'

'நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றுங்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே'

என்பன காண்க. இனி, உரியியலையே நோக்குவோம்,

'வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா உரிச்சொல் மேன.'

'உரு உட் காகும் புரை உயர் பாகும்
குருவும் கெழுவும் நிறனா கும்மே.'

'செல்லல் இன்னல் இன்னுமையே
மல்லல் வளனே ஏபெற் றாகும்.'

இவ்வாறு வந்துள்ளன பல. இனி, இச்சொல் (தேவு) வந்துள்ள சூத்திரத்தின் முதலடி,

'தாவே வலியும் வருத்தமு மாகும்'

என்றிருத்தலின், இரண்டாம் அடி,

'தேவுக் கொளற் பொருட்டு தெவ்வுப்பகையாகும்'

என்றே அமைந்திருக்கும் என்பது எளிதிற் புலனாகும். (நுண்பொருள் விளக்கம், பக். 131-132)

தொல்காப்பியத்துள் வந்துள்ள இரண்டிச் சூத்திரங்கள் 552. தனிச்சொல் பெற்று வந்த இரண்டடிச் சூத்திரங்கள் 20. ஆக 572 சூத்திரங்கள் இரண்டடிச் சூத்திரங்களாகும். இவற்றுள் திரு.ரெட்டியார் அவர்கள் காட்டியபடி இரண்டாமெழுத்தொன்று எதுகை பெற்று

வந்தன 317. இனவெழுத்துப் பெற்றும் பிறவெழுத்துப் பெற்றும் எதுகை அமைதி கொண்டன 210. இன்னும் 45 சூத்திரங்கள் குறிலுக்கு நெடிலும் நெடிலுக்குக் குறிலும் அடிமோனையாக அமைந்து காணப் பெறுகின்றன.

'ஊரொடு தோற்றமும் உரித்து எனமொழிப
வழக்கொடு சிவணிய வகைமையான.'

(தொல். புறத். 25)

'குறிப்பே குறித்தது கொள்ளும் ஆயின்
ஆங்கு அவை நிகழும் என்மனார் புலவர்.'

(தொல். களவியம். 6)

'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப் பினவே திசைச் சொற் கிளவி.'

(தொல். எச்ச. 4)

'முதல்முன் ஐவரின் கண்என் வேற்றுமை
சினைமுன் வருதல் தெள்ளிது என்ப.'

(தொல். சொல். வேற். மயங். 5)

'முதலும் சினையும் பொருள் வேறுபடா
நுவலுங் காலைச் சொற் குறிப்பினவே.'

(தொல். சொல். வேற். மயங். 6)

இங்ஙனம் வரும் இரண்டடி நூற்பாக்களைப் போன்றுவரும் செய்யுள், பாவின் வகைகளுள் குறட்பா ஒன்றே. ஆதலால், குறட்பா அமைதிக்கும் இரண்டடி நூற்பாவின் நடைக்கும் பெரிதும் ஒற்றுமை யுண்டு எனக் கருத இடமுண்டு. வெண்பா இயலானும் சூத்திரம் அமையும் எனப் பேராசிரியர் உரையில் காணும் குறிப்பும் இதற்கு அமைதிதருவதாயுள்ளது.

மேலே நூற்பாவிற்கு குறித்த வகையில் நெடிலுக்குக் குறிலும் குறிலுக்கு நெடிலும் மோனை அமைதி கொண்ட குறட்பாக்களையும் இனவெழுத்துப் பெற்றும் பிறவெழுத்துப் பெற்றும் வரும் குறட்பாக் களையும் இருவிகற்பமாய் வந்தன என்பர் இலக்கண நூலார்.

'அறனன்று மாதவ னென்ப துலகெந்தை
தாள்காணார் நாணுக் கொள'

என்பதை இருவிகற்பக் குறள் வெண்பா எனச் சிதம்பரச் செய்யுட் கோவை தருகிறது. மாறன் பாப் பாவினத்தில்,

'மாத ரிலவிதழ்போன் மாண்புற்றோ மாதவனால்
வானோ ரருந்து மருந்து'

என்பது இரண்டு விகற்பக் குறள் வெண்பாவிற்கு எடுத்துக்காட்டாக உள்ளது. பாவின் பெயராலே போற்றப்பெறும் திருக்குறள் நூலகத்தும் மேற்குறித்த அமைதி கொண்டனபலவுள. சில வருமாறு:—

'நோக்கினா ளேக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக் கொண்டன்ன தகைத்து.' (குறள். 109 : 2)

'பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்' (குறள் 58 : 10)

'நூலாருள் நூல்வல்ல னாகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு' (குறள். 69 : 2)

இவற்றால் குறட்பாக்களில் இருவிகற்பாய் வருதல் போல ஆசிரியர் தொல்காப்பியரும் இருவிகற்பமாய் எதுகை மோனையை மேற்கொண்டனர் என்பது தெளிவாம்.

இன்னும் ஒன்று. செய்யுளில் மட்டும் வரும் எனத்தொல்காப்பியர் விதித்த விதிப்படி வரும் சொற்றொடரை அவர்தம் சூத்திரங்களில் பல இடத்தும் எடுத்தாளுதலும் கவனிக்கத் தக்கதாம். அகர ஈற்றுச் பெயர்களின் முன் வன்கணம், மென்கணம், இடைக்கணம் உயிர்க் கணங்களில் வரும் முதனிலைகள் வந்து கூடுமிடத்து உளதாம் மாறுதல்களை உயிர் மயங்கியலில் 2 முதல் 6 வரை உள்ள 5 சூத்திரங் களிலே விளக்கியுள்ளார். ஆறாவது சூத்திரம்,

'நீட வருதல் செய்யுளுள் உரித்தே'

என்பது. இதற்கு முந்திய சூத்திரம்,

'உயிர் முன் வரினும் ஆயியல் திரியாது'

என வருவதனை நோக்கி, வருமொழி முதல் உயிரே என உரையாசிரியர்கள் கொண்டு,

'ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே'

'ஆயிரு பாற்சொல்'

என்பவற்றை உதாரணமாகக் காட்டினர். இவ்வுதாரணங்கள் இரண்டும் தொல்காப்பியத்துள் பயின்றுவரும் தொடர்களே. எனவே, உரையாசிரியர்கள் தொல்காப்பிய நூற்பாவைச் செய்யுளாகவே கொண்டனர் என்பது தெளிவாகும்.

மேலும், 'வருமொழி வரையாது கூறினமையில், வன்கணம் ஒழிந்த மென்கணம், இடைக்கணங்கள் வருங்கால் சுட்டு நீளுதல் கூடும்' என்று எழுதி, 'உதாரணம் வந்த வழிக் கண்டு கொள்க' என்றனர் உரையாசிரியர். தொல்காப்பியர் தம் நூலுள், ஆ முறை (8 : 45, 156; 6 : 25; 17 : 67), ஆ முப்பெயரும் (7 : 27; 29 : 8 : 33, 80)

ஆவயின் (2 : 1; 3 ; 14; 6 : 6) என மென்கண இடைக்கண மொழிகள் வருமிடத்துச் சுட்டு நீண்டு வருதலான ஆட்சி காணப்படுகிறது. தொல்காப்பியர் வன்கண, மென்கண, இடைக்கண, உயிரக்கணங் களுக்குச் சுட்டின்முன் வரும் விதி முன்னர் உரைத்தமையால், 'நீட வருதல்' என்னும் சூத்திரத்தின் வருமொழி நாற்கணமுமாக வருத லாகக் கோடலே அமைவுடைத்தாகும் என்று தோன்றுகிறது. செய் யுட்கு வகுத்த விதியை ஆசிரியர் உடம்பொடு புணர்த்துக் கொள்ளு தலின், நூற்பாவும் செய்யுளமைதியுடையது என்பது போதரும்.

''யாமரக் கிளவியும், பிடாவும், தளாவும்
ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே'

(தொல். எழுத். உயிர். மயங். 35)

என்னும் சூத்திரத்து,'யா'எனவரும் முதலடிக்கு ஒப்பஇரண்டாமடியில் ஆ முப்பெயரும் எனச் சுட்டு நீட்சி கொண்டார் என்றும் கருதலாம். இம்மாதிரி மோனையில் அமைந்த நீட்சிஇடங்கள் தொல்காப்பியத்துள் சில உள.

ஐ, ஔ, என்னும் ஆயீ ரெழுத்திற்கு (2 : 9)

தான், யான், என்னும் ஆயீ ரிறுதியும் (6 : 20)

என ஓரடியிற் கூட அகரச்சுட்டு நீண்டு வருதலும் காணப்படுகிறது.

சூத்திரயாப்பிற்கு எதுகை மோனை அமைதி உள்ளமை பற்றிப் பேராசிரியர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களுடன் நான் பேசிக் கொண்டிருந்தபொழுது, ''தொல்காப்பிய மரபியலில் யாட்டின் ஆண் பாற் பெயராக 'மொத்தை' எனத் தாமோதரம் பிள்ளை அவர்கள் பதிப்பில் காட்டப்பெற்ற பாடம், பிற் பதிப்புகளில் 'மோத் தை' எனக் கொள்ளப்பெற்றது மோனை அமைதி பற்றியதாகும்'' என் னும் செய்தியைத் தெரிவித்தார்கள். பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் குறித்த மரபியல் சூத்திரங்கள் வருமாறு ;

'ஏது மேற்றையு மொருத்தலுங் களிறுஞ்
சேவுஞ் சேவலு மிரலையுங் கலையு
மோத்தையுந் தகரு முதளு மப்பரும்
போத்துங் கண்டியுங் கடுவனும் பிறவும்
யாத்த வாண்பாற் பெயரென மொழிப.'

(தொல். பொருள். மரபு, 2)

'மோத்தையுந் தகரு முதளு மப்பரும்
யாத்த வென்ப யாட்டின் கண்ணே.'

(தொல். பொருள். மரபு. 47)

மேற்குறித்த இரண்டு சூத்திரங்களிலும் அடிகளிடையே நெடில் மோனை உள்ளமையில், 'மோத்தை' என்பதே சரியான பாடம் எனப்

பிற்பதிப்பாசிரியர்கள் துணிந்தனர். திவாகரம், பிங்கலம், சூடாமணி நிகண்டுகள் வெள்ளாட்டின் ஆண்பாற்பெயராக 'மோத்தை' என்பதையே குறித்துள்ளமையும் ஈண்டுக் கவனிக்கத்தக்கதாம்.

மேலே கூறிய பலவற்றாலும் செய்யுட்குரிய எதுகை மோனைக் கட்டுக்கோப்புகளைத் தொல்காப்பியர் தமது சூத்திர யாப்பில் எங்கும் மேற்கொண்டுள்ளார் என்பது நன்கு விளங்கும்.

9. கருத்துத் திரட்டு

'மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயின்
தோன்றுமொழிப் புலவரது பிண்டம் என்ப'

(தொல். பொருள். செய். 165)

எனவரும் தொல்காப்பியச் சூத்திரத்தின் உண்மைப்பாடம் 'தொன்றுவா, தோன்றுவா' என்பதை ஆராயும் முகத்தான் இதுகாறும் கூறி வந்த கருத்துகளை ஒருங்கே சேர்த்துப் பார்ப்போம். 'தொன்று' என்னும் சொல் பழமை என்னும் பொருள் தருவதன்றி விளங்குதல் என்னும் பொருள் தருவது அன்று என்பதும், விளங்குதல் என்பது பிரசித்தம் எனப் பொருள் தரினும் பழமை என்னும் பொருள் தருவதன்று என்பதும் முதற்கண் கூறப்பெற்றன. அடுத்து, 'தொன்று' என்பது பழமை அல்லது பிரசித்தம் என்னும் பொருளில் ஆட்சி பெற்றுள்ளது எனக் காட்டிய நூலாதாரங்கள் எல்லாம் 'பழமை' என்னும் பொருட்குரியதேயன்றிப் பிரசித்தம் என்னும் பொருள் தருமாறில்லை எனபது விளக்கப்பெற்றது. தொன்று என்பது பழமைப் பொருளிலும், தோன்று என்பது விளங்கும் என்னும் பொருளிலும் தொல்காப்பியர் ஆண்டுள்ளார் என்பதும் கண்டோம். 'தோன்றும்' என்பதற்கு 'விளங்கிய' எனப் பொருள் கண்ட நச்சினார்க்கினியர் 'விளங்க' என்பதற்குத் 'தோன்று' எனப் பொருளியலில் உரை தருதலின் அவர் கொண்ட விளங்கிய என்னும் பொருள் 'தோன்று' என்னும் சொல்லுக்கேயாகும் என்பது காட்டப்பெற்றது. பின்னர், 'தொன்று' 'தோன்று' என்பன இரண்டும் வெவ்வேறு பொருளினைக் குறிப்பன என்பதும், தொன்று பெயர்ப்பொருளிலும், தோன்று வினைப் பொருளிலும் வருவன என்பதும் கூறியதோடு, 'தோன்றும்' என்பது முற்றாயும் எச்சமாயும் இலக்கிய இலக்கண நூல்களில் ஆளப்பெற்றிருத்தலும் எடுத்துக்காட்டப்பெற்றது. 'தோன்றுமொழி' பெயரெச்சத் தொடராய் வருதலைச் சுட்டியும், 'தோன்று மொழிப் புலவர்' என்னும் தொடரையும் அதற்கு நச்சினார்க்கினியர் தந்துள்ள பொருளையும்இலக்கண விளக்க நூலாரும் மேற்கொண்டுள்ளனர் என்பது குறித்தும் விளக்கப்பெற்றது. இறுதியாக நூற்பா என்பது செய்யுள் வகையுள் ஒன்று என்பதும், செய்யுளுக்குரிய எதுகை மோனை அமைதி அதற்கும் உண்டு என்பதும் காட்டும் முகத்தான் தொல்காப்பிய உரையாசிரியர், நிகண்டாசிரியர்கள், இலக்கண விளக்க நூலார்

ஆகியோரின் கருத்துகள் எடுத்து விளக்கப்பெற்றன. இப்பொருள் பற்றித் திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் 'நுண்பொருள் விளக்க' நூலிற் கூறியதைக் காட்டி, அவர் கூறிய அமைதி தொல்காப்பிய நூலகத்து உளதா என்று காண முற்பட்டு அந்நூலிலுள்ள இரண்டடிச் சூத்திரங்களின் போக்குகள் புலப்படுத்தப்பெற்றன. இரண்டடிச் சூத்திரங்கள் குறட்பாவை ஒத்ததோர் அமைப்புடையன என்பதும், ஆசிரியர் தொல்காப்பியர் செய்யுட்கு விதித்த விதிமுறைகளைச் சூத்திரயாப்புக்கும் எடுத்தாண்டுள்ளார் என்பதும் காட்டி, நூற்பா செய்யுளமைதி பெற்றதே என்பது துணியப் பெற்றது.

10. தேற்றம்

இங்ஙனமாகப் பல படியானும், 'தொன்று', 'தோன்று' என்னும் சொற்களுள் ஆசிரியர் தொல்காப்பியர் தமது சூத்திரத்து ஆண்டது எதுவாக இருத்தல் கூடும் என்பதனை ஆராயும் முகத்தான் அச்சொற்களின் பொருளும், நூலாட்சியும், பிற இயல்புகளும் கண்டோம். பொருளமைதியாலும் சொல்லமைப்பாலும், யாப்பின் இயல்பினாலும், 'மூன்றுறுப்படக்கிய' என்னும் முதலடிக்கு ஏற்ற பாடம் 'தோன்று மொழி' என்பதேயாகும் என்றும் துணிபினையே தருகின்றது. 'தொன்று' என்பது ஓர் ஊகமான பாடமே எனக்கொள்ளக் கிடக்கின்றதேயன்றி அதனை மேற்கொள்ளுதற்குத் தக்க ஆதரவு இருப்பதாகத் தெரியவரவில்லை. ஆகவே, தொல்காப்பியப் பதிப்பாசிரியர்கள் இச்சூத்திரத்தைப் பொறுத்தவரையில் பிழைப்படப் பாடம் துணிந்தார்கள் என்று கொள்ளுவதற்கு இடமில்லை.

> 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும், அப் பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு'

என ஆராய்ச்சிக்கு வித்திட்டுச் சென்ற பொய்யாமொழியாரின் வாக்கை பொன்னே போல் போற்றி எனது இந்த ஆய்வுரையை அறிஞர் பெருமக்களின் முன்னர்ப் படைக்கின்றேன். எந்த ஆராய்ச்சியையும் முற்ற முடிந்த முடிவு என எவரும் கொள்ளார். ஆராய்ச்சி என்பதே மீண்டும் மீண்டும் சிந்திக்கத் தூண்டுவதுதானே?